# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

## இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டிற்கான பொதுக் கலைமாணித் தேர்வு – (2015/2016) (Dec - 2019)

## ED/S – 2213 நிறுவன நடத்தையும், பயன்தரு பாடசாலை முகாமைத்துவமும் (Organizational Behavior and Effective School Management)

நேரம் - 03 மணித்தியாலங்கள்.

பகுதி I இல் இருந்து இரு (02) வினாக்களுக்கும் பகுதி II இல் இருந்து மூன்று (03) வினாக்களுக்கும் மொத்தமாக ஐந்து (05) வினாக்களுக்கு விடைதருக.

---

### பகுதி I

01. அ. பாடசாலையின் தரத்தினை அடிப்படையாகக்கொண்ட பாடசாலைக் கட்டமைப்பில், வகை I-AB பாடசாலையொன்றின் உள்ளகரீதியான நிறுவனக் கட்டமைப்பினை வரைந்து காட்டுக. (04 புள்ளிகள்)

ஆ. நிறுவனத்தின் நடவடிக்கைகளில் பாதிப்பை ஏற்படுத்தும் நிறுவனத்தை சுற்றியுள்ள பொதுவான காரணிகளுள் தொழிநுட்பக்காரணிகள் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களில் எவ்வகையில் தாக்கம் புரிகின்றதை சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

இ. "இன்றைய காலகட்டத்தில் அனேகமான பாடசாலைகளில் SWOT ஆய்வுகள் பயன்படுத்தப்படுவதில்லை" இதற்கான காரணங்கள் ஐந்தையும், (05) பயன்படுத்துவதால் உண்டாகும் அபிவிருத்திகள் ஐந்தையும் (05) குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

02. அ."முகாமைத்துவமானது பாரம்பரிய நிறுவனக் கோட்பாடுகளில் இருந்து விலகி விஞ்ஞானரீதியான செயற்பாடுகளில் பாரிய வளர்ச்சிகண்டுள்ளது". இதனை நிரூபிக்க இரு உதாரணங்களை முன்வைத்து உதாரண விளக்கம் தருக. (04 புள்ளிகள்)

ஆ. ஒரு நிறுவனத்தின் நடத்தை என்பதால் நீர் விளங்கிக்கொள்வது யாதென்பதனை மக்ஸ் வெபரின் (max weber) அதிகாரக் கட்டமைப்பின் இலட்சிய மூலங்களை ஆதாரம் காட்டி சுருக்கமாக விளக்குக? (05 புள்ளிகள்)

இ. வினைதிறன் (Efficiency) உள்ள பாடசாலையைக் கண்டறிவதற்கான பிரமாணங்களில் வினைத்திறனுக்கும், வளங்களுக்கும் இடையில் காணப்படும் தொடர்புகளைப்பற்றி சுருக்கமாக ஆராய்க. (05 புள்ளிகள்)

03. அ. அரச சார்பற்ற தனியார் பாடசாலைகளின் வினைத்திறன் கொண்ட (Effici
செயற்பாடுகள் நான்கினை (04) இனங்கண்டு அவற்றினைப் பட்டியற்படுத்துக.
(04 புள்

அ. **"இன்று பாடசாலைகளில் முகாமையாளர்களைவிட சிறந்த தலைமைத்துவம் கெ அதிபர்களையே நிர்வாகத்தில் எதிர்பார்க்கின்றோம்"** எனவே அதிபர் ஒருசருக்கு இ வேண்டிய தலைமைத்துவப் பண்புகள் இரண்டினைக் (02) கூறி சுருக்கமாக விளக்குக.
(05 புள்

ஆ. **"உண்மையான தகவல்களை மையமாகக் கொண்டே அபிவிருத்திக்கான திட்டங் உருவாக்கலாம்"** இந்த வகையில் பாடசாலைகளில் தகவல் தொகுதி முறையாகப்பினபற்றுவதனால் உண்டாகும் அபிவிருத்திகள் தொடர்பாக கருத்துரை வழ
(05 புள்

## பகுதி II

04. அ. **"பாடசாலையில் உள்ள வளங்களினைப் பயன்படுத்தி உச்ச அளவுப் பயனைப் பெறு சிறந்த முகாமைத்துவமாகும்"** அந்தவகையில் வளங்களினை ஒதுக்கீடு செய்பவர்க வளங்களினைப் பகிர்ந்தளிப்பவர்களும் இன்றைய சூழ்நிலையில் எவ்வாறான உத்திக கையாள வேண்டும் என்பதனை பகுப்பாய்வு செய்க.
(10 புள்

ஆ. பாடசாலை நிர்வாகமானது இருவழித் தொடர்பாடல்களை மேம்படுத்து பாடசாலைக்கும் ஆளணியினருக்கும் இடையில் கல்வித்திட்டமிடலின் குறையறிதல் எவ்வகையில் தாக்கம் செலுத்துகின்றதென்பதனை பாடசாலை நிர்வாகம் ச தெளிவுபடுத்துக.
(14 புள்

05. அ. **"ஆளணி வளங்களின் குறைபாடுகள் பாடசாலை அபிவிருத்தியில் பாரிய தாக்கத் செலுத்தும் ஒரு முக்கியவிடயமாகும்."** இவ்வளக் குறைபாட்டினை அதிபர் வினைத் கொண்ட முகாமைத்துவமாக மாற்றி எவ்வகையில் பங்காற்ற முடியும் என்பதனை பகுப் செய்க.
(10 புள்

ஆ. **"பாடசாலை ஒன்றின் உயிரோட்டமுள்ள நிர்வாக செயற்பாடுகளுக்கு வினை (Effectiveness), வினைத்திறன் (Efficiency) என்பன முக்கிய கருப்பொருள்களாகி** பாடசாலை முகாமைத்துவத்தில் இவை இரண்டினதும் தொழிற்பாடுகள் குறித்து சுருக் விளக்குக.
(14 புள்

06. அ. **"ஆசிரியர்கள் பாடசாலைகளில் கற்பிப்பவர்கள் மட்டுமல்ல முகாமையாளர்களாகவும், வழிகாட்டுபவர்களாகவும் காணப்படவேண்டும்"** இதன் மூலம் அவர்களுக்கு முன்னூட்டல்கள் வழங்கப்பட வேண்டிய அவசியத்தினை ஆசிரிய அபிவிருத்தியோடு தொடர்புபடுத்தி விளக்குக.

(10 புள்ளிகள்)

ஆ. ஆரம்பகாலக் கலைத்திட்டங்கள் பாடங்களுக்கும், இன்றைய காலத்தில் இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு கலைத்திட்டங்கள் உருவாக்கப்படுகின்றன. இதன் மறுதாக்கமே மாணவர்கள் பிரத்தியேகக் கல்வியை நாடுகின்றனர். இது குறித்த உமது நிலைப்பாட்டினை கவனயீர்ப்பும், கலைத்திட்டமும் எனும் தலைப்பில் கட்டுரை வரைக? (14 புள்ளிகள்)

07. கீழ்வருவன தொடர்பான விடைகளை சுருக்கமாக விளக்குக.

அ. தனிப்பட்ட ஆசிரியர்களுக்கான நேரசூசிகள் தயாரிக்கும்போது ஏற்படும் சவால்கள்.

ஆ. பாடசாலை நிர்வாகம் சார்பாக ஏற்பட்ட அண்மைக்கால மாற்றங்கள்.

இ. பாடசாலையின் கல்வி முகாமைத்துவ தகவல் தொகுதி (EMIS) இன்செயற்பாடுகள்.

உ. உறுதியற்ற தீர்மானங்கள் எடுக்கப்படுவதற்கான காரணங்கள்.

உ. கட்டாயப்படுத்தப்படும் மாற்றமும் பாடசாலை நிர்வாகமும்.

(6x4 = 24 புள்ளிகள்)

மொத்த புள்ளிகள் : **(பகுதி I) 28 + (பகுதி II) 72 =** 100